# சுற்றுலா மையங்களின் உள்ளார்ந்த வளங்கள் பற்றிய ஓர் மதிப்பீடு: யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதய நிலையினை சிறப்பாகக் கொண்டது

**டினேஸ், வி[*] & இராஜேஸ்வரன், எஸ்.ரி.பி.**

**ஆய்வுச் சுருக்கம்**

குடாநாட்டில் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தி முன்னெடுப்புக்களில் ஏனைய துறைகளினைப்போன்று சுற்றுலாத்துறையும் வளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. இத்துறையானது திட்டமிடப்பட்ட முறையில், ஒழுங்கமைப்புடன் கூடியதோர் துறையாக இன்னமும் பரிணமிக்கவில்லை என்று அறியப்பட்டுள்ளது. எனவே இத்துறையின் முக்கியத்துவம் உணரப்பட்டநிலையில், உள்ளார்ந்த வளங்களின் தற்போதய நிலையினை அறிந்து, அதனூடாக எதிர்கால அபிவிருத்திக்கு இக்குறித்த வளங்களின் இயலளவுத்தன்மை, சுற்றுச்சூழலிற்கு இத்துறையின் தாக்கநிலை போன்றனவற்றினை மதிப்பிடுவதற்காக முதலாம், இரண்டாம் நிலைத்தரவு, தகவல்களினூடாக SWOT பகுப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டு, முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் கரையோர, வரலாற்று, கலாசார சுற்றுலாத்துறைகள் சிறப்பாக உல்லாசப்பயணிகளை ஈர்த்துக் கொண்டுள்ள பொழுதும், அங்குள்ள உள்ளார்ந்த வளங்கள் வினைத்திறனாகப் பயன்படுத்தப்படாத நிலையே இனங்கண்டறியப்பட்டுள்ளது. எனவே இத்துறையின் பல்வேறுபட்ட பிரிவுகள் ஒவ்வொன்றும் சிறப்பான முறையில் நன்கு திட்டமிடப்பட்டு ஒழுங்கமைக்கப்படும் பட்சத்திலேயே எதிர்காலத்தில் உண்மையான சுற்றலாத்துறைக்கான பண்புகளினைக் கொண்ட எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடையமுடியும் என இவ் ஆய்வி னூடாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**பிரதான சொற்கள்:** உள்ளார்ந்த வளங்கள், நிலைபேறான தன்மை, சுற்றுலாத்துறை, வினைத்திறன், இயலளவுத் தன்மை

To whom correspondence should be addressed: 2008kumaar@gmail.com

[*] Faculty of Graduate Studies, University of Jaffna.